பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 28 (13—11—68) புதன் ★ வெளியூர் : ஐப்பசி 29 (14—11—68) வியாழன் [இதழ் : 123

மலை மாநிலம்

புதுடில்லி நவ. 13—

அசாமில் தன்னதிகாரத்துடன் கூடிய மலை மாநிலம் ஒன்றை அமைப்பதற்காக அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு வழிகோலும் மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துவிட்டது. அடுத்த சில நாட்களில் இந்த மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும்.

'மத்திய அரசுடன் போராடி உரிமைகளைப் பெறுவேன்'

மேயர் வேலூர் நாராயணன் உறுதி

சென்னை, நவ. 12—

"இந்தியாவின் பெருநகர்களான கல்கத்தா, டில்லி ஆகியவற்றை வளப்படுத்தி அழகுபடுத்த மத்திய அரசு மிகப் பெருந் தொகைகளை மானியமாக வழங்குகின்றது; இந்தியாவின் முப்பெரு நகர்களில் ஒன்றான சென்னைக்கும் அந்த மானியத்தைப் பெற உரிமை உண்டு; என் பதவிக் காலத்தில் அதைக் கேட்பதற்குப் பாடுபடுவேன்; என்னுடைய இந்தப் பணியில் இதழ்கள் நடத்துவோர் அனைவரது ஒத்துழைப்பும் எனக்கு அவசியமாகும்"

என்று, சென்னை மாநகராட்சிப் புதிய மேயர் வேலூர் நாராயணன் வலியுறுத்திக் கூறினர்.

மேயர் தேர்தல் நடந்ததும், அவரை அணுகிய செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினர்.

"சென்னை நகரக் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கென மாநில அரசுடன் இணைந்து நின்று செயல்பட்டுக் காவிரி நீர் கொண்டுவருவது சம்பந்தமான வேலைகள் செம்மையுற நடந்தேறப் பாடுபடுவேன்"

என்றும் அவர் விளக்கிக் கூறினர்.

துணை மேயர்
கே. கோவிந்தசாமி
வாழ்க்கைக் குறிப்பு

36 வயதான துணை மேயர் கே. கோவிந்தசாமி அவர்கள், 'தி. மு. கழகத்தின் தொண்டர்களில் ஒருவர்' என்று தன்னை வர்ணித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்பவராவார்.

ரேடியேட்டர் விற்பனையில் ஈடுபட்டிருக்கும் இவர், தி. மு. கழகம் நடத்திய விலைவாசி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு மூன்று திங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தையான அவர், கடந்த ஒன்பது ஆண்டுக்காலமாக மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்.

மூன்றாவது முறையாக மயிலாப்பூர் காரணீசுவரபுரம் (93-வது வட்டம்) மக்கள் சார்பில் மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதிய மேயராக வேலூர் நாராயணன்

துணைமேயராக கே. கோவிந்தசாமி

ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

சென்னை, நவ. 12—

சென்னை மாநகராட்சி மன்றத்தின் 1968-69 ம் ஆண்டுக்கான மேயராக வழக்கறிஞர் வேலூர் டி. நாராயணன் இன்று ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணை மேயராக மயிலைத் தோழர் கே. கோவிந்தசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் வேலூர் நாராயணன், கழகத்தின் 9-வது மேயராவார்.

1959-ஆம் ஆண்டில் மாநகராட்சி மன்றத்தை முதன் முதலாகத் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றியதிலிருந்து -- இடையில் நான்கு மாதங்கள் தவிர்த்து -- தொடர்ந்து தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களும், தி. மு. கழக ஆதரவு பெற்றவர்களுமே மேயர் -- துணை மேயர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கழக ஆதரவுடன் சுயேச்சை உறுப்பினர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தியும், முஸ்லீம் லீக் உறுப்பினர் டாக்டர் அபிபுல்லா பேக்கும் மேயர்களாக இருந்திருக்கின்றனர்.

கழக உறுப்பினர் குசேலர் இரண்டுமுறை தொடர்ந்து மேயர் பதவி வகித்திருக்கிறார்.

அண்ணா இல்லத்தில்

பிற்பகல் 3-30 மணியளவில் முதலமைச்சர் அண்ணா அவர்களின் இல்லத்தில் தி. மு. கழகம் -- மற்றும் தோழமைக் கட்சிகள் ஆகியவற்றைச் சேர்ந்த மாநகராட்சி உறுப்பினர்கள் கூடினர்.

அண்ணா அவர்களுடன் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், வெளியீட்டுச் செயலாளர் சி. பி. சிற்றரசு ஆகியோர் மாநகராட்சி உறுப்பினர்களோடு கலந்துரையாடினர்.

அறிஞர் அண்ணா தெரிவித்த முடிவினை ஏற்று அவர்கள் ரிப்பன் கட்டிடம் சென்றனர்.

மேயர் தேர்தல்

மாநகராட்சி ஆணையர் திரு. அம்பாசங்கர், அவைக்குத் தலைமையேற்று முதலில் உறுப்பினர்களுக்குப் பதவி ஏற்பு நிகழ்ச்சியை நடத்திவைத்தார்.

அடுத்து மேயர் தேர்தலை நடத்திவைக்க, மன்றத்தினர், தற்காலிகத் தலைவராக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஆணையர் கேட்டுக்கொண்டார்.

தற்காலிகத் தலைவராக முன்னாள் மேயர் மைனர் மோசஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாநகராட்சி தி. மு. க. கட்சித் தலைவர் வி முனுசாமி, தி. மு. க. சார்பில் வேலூர் டி. நாராயணன் பெயரை மேயர் பதவிக்கு முன்மொழிவதாக அறிவித்தார்; கே. முருகேசன் வழிமொழிந்தார்.

வேறு வேட்பாளர் பெயர் எதுவும் முன்மொழியப்படாததால் வேலூர் டி. நாராயணன், மேயராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வேலூர் நாராயணனை மேயர் இருக்கையை நோக்கி வி. முனுசாமியும், எதிர்க் கட்சித் தலைவர் குப்புசாமியும் அழைத்துச் சென்றனர்.

தற்காலிக அவைத் தலைவர் மைனர் மோசஸ், வேலூர் நாராயணனை கைகுலுக்கி வரவேற்று, மேயருக்கான பதக்கத்தை அணிவித்தார்.

துணை மேயர் தேர்தல்

மேயர் வேலூர் நாராயணன், முதற்பணியாக துணை மேயர் தேர்தலை நடத்தி வைத்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 93-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் கே. கோவிந்தசாமியின் பெயரைத் தாம் முன்மொழிவதாக வி. முனுசாமி தெரிவித்தார். முன்னாள் மத்தியக் குழுத் தலைவர் சா. கணேசன் வழிமொழிந்தார்.

வேறு வேட்பாளர் பெயர் எதுவும் முன்மொழியப்படவில்லை; அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கே. கோவிந்தசாமியை துணை மேயரின் இருக்கைக்கு இரு கட்சித் தலைவர்களும் அழைத்துச் சென்று அமர்த்தினர்.

முதலாவதாக தி. மு. க. மாநகராட்சி கட்சியின் சார்பில் வி. முனுசாமி புதிய மேயருக்கும் துணை மேயருக்கும் மாலைகளை அணிவித்து பாராட்டிப் பேசினர்.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., அப்துல் சமது எம்.பி., முன்னாள் மேயர் அ. பொ. அரசு ஆகியோர் பார்வையாளர் வரிசையில் அமர்ந்து தேர்தலை கவனித்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

புதிய மேயர்
வேலூர் நாராயணன்
வாழ்க்கைக் குறிப்பு

வேலூர் டி. நாராயணன், 55-வது வட்டம் ராகம்மையார் நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராவார்.

1964-ல் நடந்த தேர்தலிலும் வெற்றிபெற்று நான்கரை ஆண்டுக்காலம் மாநகராட்சி உறுப்பினராக இருந்தார்.

இவரது பெற்றோர் தென்னாற்காடு மாவட்டம்—திண்டிவனம் வட்டத்தைச் சார்ந்தவர்கள்.

திண்டிவனத்தையடுத்த வேலூர் கிராமத்தில் 1929 ஜூலை 16-ம் நாள் பிறந்த இவர், இளமையில் சென்னை புரசைவாக்கம் பெப்ரீஷியஸ் உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்றார்.

எம்.ஏ. பட்டதாரியான இவர், சட்டக் கல்லூரியிலும் பயின்று பி.எல். தேறினர்.

பப்ளிக் பிராசிகியூட்டராக இருந்த எதலே ஷியசிடமும், தற்போது உயர் நீதிமன்ற நீதிபதியாக உள்ள என். கிருஷ்ணசாமி ரெட்டி அவர்களிடமும் ஜூனியராக இருந்தார்.

கடந்த 11-ஆண்டுகளாக வழக்கறிஞராகப் பணியாற்றிவருகிறார்.

கடந்த 15-ஆண்டுக் காலமாகத் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருக்கிறார்; பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளானோர் சார்பில் நின்று வழக்குமன்றங்களில் வாதாடி வெற்றிபெற்றிருக்கிறார்.

1958-ல் திருமதி வைதேகியை இவர் மணந்தார்; உஷா, லதா என்ற இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர்.

மேலை மாம்பலம் அஞ்சுகம் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகியாக இருந்துவரும் வேலூர் நாராயணன், அயன்புரம் தாராப்பூர் லோகநாதன் உயர்நிலைப் பள்ளியின் காவலர் குழு உறுப்பினராகவும் இருந்து கல்விப் பணியாற்றிவருகிறார்.

பஞ்ச நிவாரணத்துக்கு ஒதுக்கிய பணம் தேர்தல் வேட்டைக்கு!

பங்கு போட்டுக் கொண்டு செலவிடுகின்றனர் காங்கிரசார்

வறட்சி நீங்கியும் பணி நிற்கவில்லை---கருநாடக அரசின் தாராளம்

காங்கிரசு ஆளும் கருநாடகத்தில், வறட்சியும் பஞ்சமும் தலை தூக்கின! பருவ மழை தவறியதால் கிராமவாசிகள் தொல்லைப்பட்டனர்!

தாலுகா போர்டு தேர்தல்களைச் சந்திக்கவேண்டியிருந்த கருநாடகக் காங்கிரசு ஆட்சிக்கு, வறட்சியும் பஞ்சமும் 'வரப்பிரசாதங்களாய்' அமைந்தன!

'நிவாரண நடவடிக்கை' என்ற பெயரில், காங்கிரசு அரசு, நான்கு கோடி ரூபாயை ஒதுக்கியது; ஆனல் அந்தப் பணத்தை விநியோகிக்கும் பொறுப்பு, காங்கிரசுக்காரர்கள் கையில் சிக்கியுள்ளது!

அமைச்சரவையில் இருபத்தெட்டுப் பேர் உள்ளனர்! இந்த அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் சில மாவட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; அந்தந்த மாவட்டங்களில் நிவாரணப் பணிகள் 'ஒழுங்காக' நடைபெறுகின்றனவா என மேற்பார்வையிடுவது இவர்கள் பொறுப்பாம்; ஆனல், அமைச்சர்கள் (இதைப் பயன்படுத்தி) பகிரங்கமான தேர்தல் வேலைகளில் இடைவிடாது ஈடுபடுகின்றனர்!

இந்த நான்கு கோடி ரூபாயும் காங்கிரசுக்கு ஏற்கனவே பெரும் இலாபத்தைச் சம்பாதித்துத் தந்துள்ளது! கிராம மக்கள், இந்த நிவாரண நடவடிக்கைகளின் பயனை எளிதாகக் சுவரப்பட்டுவருகின்றனர்!

"நிவாரண நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் பணம் செலவழிப்பது தவரு? இதற்குக்கூட உள்நோக்கம் கற்பிப்பது சரியாகுமா?" என்று சிலர் கேட்கக்கூடும்.

ஆனல் இத்தகவலை வெளியிட்ட பம்பாய் வார ஏடு, 'காங்கிரசு அரசாங்கத்தின் நிவாரணப் பணிகளில் உள்நோக்கம் இருக்கத்தான் செய்கிறது' என்பதை அம்பலப்படுத்துகிறது.

பருவ மழை தவறியதற்காக—வறட்சி ஏற்பட்டதற்காக நிவாரணப் பணிகள் தொடங்கப்படுகின்றன என்ருல், மழை பெய்ததும் அப்பணிகள் நிறுத்தப்பட்டுவிடும்.

ஆனல், அண்மையில் கருநாடகத்தில் செப்டம்பர் -- அக்டோபர் திங்களில் கடுமையான -- பரவலான மழை பெய்த பின்னரும், வறட்சி நிவாரணப் பணிகள் நிறுத்தப்படவில்லை. அந்த நிவாரணப் பணிகள் விரைவில் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தவும்படுகிறது; எனின், இந்த நிவாரணப் பணிகள், உள்நோக்கம் கொண்டவையா இல்லையா என்பதைப் பொதுமக்களே தீர்மானிக்க வேண்டுகிறேம்.

தமிழக அரசின் பரிசுத் திட்டம்

இரண்டாம் குலுக்கலில் 110 இலட்சம் சீட்டுகள்

சென்னை, நவ. 13—

தமிழக அரசின் 11-வது 'எஸ்' வரிசை பரிசுச் சீட்டுகள் திங்களன்று வெளியிடப்பட்டன.

11 வரிசைகளிலும் மொத்தம் வெளியிடப்பட்டுள்ள 110 இலட்சம் சீட்டுகளும் நவம்பர் 20-ந் நாள் குலுக்கப்படும்.

ஒவ்வொரு வரிசையிலும் 10 இலட்சம் சீட்டுகளுக்குப் பரிசுத் தொகை இரண்டரை இலட்சம் ரூபாயாகும்.

இந்த 11 வரிசைகளிலும் அரசுக்கு நிகரமாக ரூ. 75 இலட்சத்துக்குக் குறையாமல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொலைவிலுள்ள மாவட்டங்களுக்கு 'எஸ்' வரிசை சீட்டுகள் கிடைக்கும் பொருட்டு திங்களன்று விமானத்தில் மதுரைக்கும், கோவைக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

சென்னைக்கு அருகிலுள்ள மற்ற மாவட்டத்தினர், நகருக்கு வந்து நேரில் சீட்டுகளைப் பெற்ருர்கள்.

"11 வரிசைகளிலும் சென்னை நகரில் மட்டும் 21,60 000 பரிசுச் சீட்டுகள் விற்பனையாகியுள்ளன"

என்று பரிசுச் சீட்டு இயக்குநர் எஸ். வாசகம் தெரிவித்தார். அவர் மேலும் விளக்கியதாவது:—

"கருவூலங்களிலிருந்து ஏஜெண்டுகளுக்குப் பரிசுச் சீட்டுகள விற்பனை இன்றுமுதல் நிறுத்தப்பட்டு

பர்மா அகதிகளுக்கு மறு வாழ்வளிப்பு

தனி இயக்குநர் நியமனம்

சென்னை, நவ. 13—

'அகதிகள் மறுவாழ்வு இயக்குநர்'

கல்லூரிகளில் பட்ட மேற் படிப்பு

துணைவேந்தர்கள் கருத்து

புதுடில்லி, நவ. 13—

"ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகள், சொந்தமாகப் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்துவதற்குச் சட்ட ரீதியில் எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்ருலும், நடைமுறையில் வேண்டிய ஆய்வுக்கூட வசதியும், நூலக வசதியும், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களும் உள்ள கல்லூரிகளில் மட்டுமே பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்துவதற்குப் பல்கலைக் கழகங்கள் அனுமதி தர வேண்டும்"

என்று வடக்கு வட்டாரத்தைச் சேர்ந்த பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிருர்கள்.

ஒரு பல்கலைக் கழகத்தின் தலைமை இடத்திற்கு அருகிலுள்ள கல்லூரிகளில் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இருந்தால், பல்கலைக் கழகம் நடத்தும் பட்ட மேற்படிப்பு வகுப்புக்களில் அவர்களைப் பங்கு பெறச் செய்யலாம் என்பதால், இத்தகையக் கல்லூரிகளில் தனியாகப் பட்ட மேற்படிப்பு வசதிகளைச் செய்யவேண்டாம் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

"பல்கலைக் கழக ஆசிரியர்களும், கல்லூரி ஆசிரியர்களும், பல்கலைக் கழக நிர்வாகிகளும் அடங்கிய ஆலோசனைக் குழுக்களை அமைப்பதன்மூலம் மாணவர்கள் நேரடியாய் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினைகளில் அவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும்" என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

செயற்கைக் கோள் மூலம் தகவல் தொடர்பு

இந்தியாவும் விரைவில் முயலும்

அமைச்சர் அறிவிப்பு

"கோ—ஆக்சியல் கேபிள் இணைப்பு -- நுண் அலை இணைப்பு -- தானியங்கி எக்ஸ்சேஞ்சுகள் போன்ற நவீன வசதிகள், அஞ்சல் -- தந்திப் பிரிவில் கொண்டுவரப்படுகின்றன; வெகு விரைவில் செயற்கைக் கோள் தகவல் தொடர்புத் துறையிலும் நாம் அடியெடுத்து வைப்போம்"

என்று அஞ்சல் -- தந்தி வாரத்தை வானொலியில் ஆற்றிய உரையில் மத்திய அமைச்சர் டாக்டர் ராம் சுபாக் சிங் தெரிவித்திருக்கிருர். அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

இன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் நிலையங்கள் இயங்குகின்றன; இவற்றில் சுமார் 90,000 அஞ்சல் நிலையங்கள் கிராமங்களில் இயங்குகின்றன; வேறு எந்த நாட்டிலும் இத்தனை அஞ்சல் நிலையங்கள் இல்லை.

நம் நாட்டில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட டெலிபோன் தொடர்புகள் உள்ளன."

செங்கற்பட்டு மாவட்டத்துக்கு அரிசி -- கோதுமை

நியாய விலைக் கடைகள் திறக்க உடனடி நடவடிக்கை

காஞ்சிபுரம், நவ 13—

செங்கற்பட்டு மாவட்டத்திற்கு -- சம்பா அறுவடை ஆரம்பமாகும் வரையில் அடுத்த 3-மாத காலத்துக்கு வேண்டிய அரிசியும், கோதுமையும் சப்ளை செய்யப்படும் என்று தமிழக உணவு அமைச்சர் உறுதியளித்துள்ளார்"

என்று மாவட்ட கலெக்டர் இலட்சுமி காந்தன் பாரதி நிருபர்களிடம் தெரிவித்தார்.

மதுராந்தகம், செங்கற்பட்டு மாவட்டங்களில் நியாய விலைக் கடைகளைத் திறக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

220 விபத்துக்கள் மூன்றே மாதத்தில்!

மக்களவையில் தகவல்

புதுடில்லி, நவ. 13—

"ஆகஸ்டுத் திங்கள் 1-ம் நாள் முதல் அக்டோபர் திங்கள் 31-ம் நாள் முடிய மூன்று மாத காலத்தில் மொத்தம் 220 இரயில் விபத்துக்கள் ஏற்பட்டன.

"இரயில்கள் மோதல் -- தடம் புரளுதல் -- ஆட்களற்ற இரயில்வே 'கேட்'டுகளில் நடைபெறும் விபத்துக்கள் -- இரயிலில் தீப்பிடித்தல் ஆகிய எல்லா விபத்துக்களும் இந்த எண்ணிக்கையில் அடங்கியுள்ளன.

"இந்த விபத்துக்களினுல் 42 பேர் மாண்டனர்; 222 பேர் காயமடைந்தனர்.

"விபத்துக்களினுல் இரயில்வேத் துறைக்கு ரூ 28,97,282 நட்டம் ஏற்பட்டது"

என்று மக்களவையில், இரயில்வே அமைச்சர் சி.எம். பூணச்சா தெரிவித்தார்.

இலஞ்ச ஊழலில் கெசட் பதிவு அதிகாரிகள்

மத்திய அரசின் நடவடிக்கை

புதுடில்லி, நவ. 13—

இலஞ்ச ஊழல், முறைகேடான செயல்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட 79 வழக்குகளை மத்தியப் புலன் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த தனிப் போலீசு நிறுவனம் இந்த ஆண்டு செப்டம்பரில் இலாகா ரீதியான நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்பியது. 15 கெசட் பதிவு அதிகாரிகளும், வேறு 80 அரசு ஊழியர்களும் இதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.

பரிசீலனை மாதத்தில் 61 வழக்குகள் தொடர்பாக இலாகா ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது; ஆறு கெசட் பதிவு அதிகாரிகளும், வேறு 69 அரசு ஊழியர்களும் தண்டனைக்குள்ளாயினர்; கெசட் பதிவு அதிகாரிகள் எச்சரிக்கப்பட்டனர். கெசட் பதிவில்லாத ஊழியர்களில் 11 பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்; இருவர் கட்டாயமாக ஓய்வு மெற்றனர்; ஒருவர் இராஜினமா செய்தார்; எட்டுப் பேர்களின் தகுதி குறைக்கப்பட்டது; மூவரது ஊதியம் குறைக்கப்பட்டது; 19 பேர்களின் ஆண்டுச் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது.

நம்பிக்கையூட்டும் நற்செய்தி

நான்காம் திட்டத்தில் சேலம் உருக்காலை

மத்திய அரசு பொறுப்பேற்கும்

சென்னை, நவ. 13—

சேலம் உருக்கு ஆலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசுத் துறையில் சேர்க்கப்படலாம்.

தமிழக அரசின் பிரதிநிதிகள் திட்டக் குழுவினருடன் இந்த மாநிலத்தின் நான்காவது திட்ட நகல் பற்றி நவம்பர் 25, 26-ம் நாட்களில் விவாதிக்கும்போது சேலம் உருக்கு ஆலை பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும்.

நான்காவது திட்டத்தின்போது புதிய உருக்கு ஆலை அமைப்பதை நிறுத்தி வைக்கலாம் என்று திட்டக் குழு கருதுகிறது; எனினும் தி. மு. க. அரசு, தனது நகல் திட்டத்தில் தெரிவித்துள்ள ஆலோசனைகள் நடைமுறைக்கு ஏற்றவை என்று திட்டக் குழுவிற்குத் தோன்றுவதால், அதை நான்காவது திட்ட காலத்திலேயே செயல்படுத்துவதற்கு ஒப்புக்கொள்ளக் கூடும் என்று கருதப்படுகிறது.

மேலும் நான்காவது திட்டத்திற்கு அந்நியச் செலாவணி எவ்வளவு கிடைக்குமென்பது திட்டவட்டமாகத் தெரியாமலிருப்பதாலும், அதன் காரணமாக நான்காவது திட்டம் முழுவதுமே மறு பரிசீலனைக்குள்ளாகியிருப்பதாலும், துவக்க வேலைகளைத் திருப்திகரமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ள சேலம் உருக்கு ஆலைத் திட்டத்திற்கு அனுமதி அளித்துவிடலாம் என்று திட்டக் குழுவின் உறுப்பினர்கள் சிலர் கருதுகின்றனராம்.

உருக்கு ஆலை அமைக்கப்பட வேண்டுமென்று பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்த கோரிக்கைகளும் நின்றுவிட்டதால் சேலம் உருக்காலையைப் போன்று நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தடையாயிருக்கக் கூடாதென்றும் அவர்கள் நம்புகின்றனராம்.

சேலம் உருக்கு ஆலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதென்று முடிவு செய்துவிட்ட பிறகு, அதை மத்திய அரசே மேற்கொண்டு, நடத்துவதற்கு எவ்விதத் தடையும் இருப்பதற்கில்லை என்று திட்டக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காங்கிரசார் அடிப்படையற்ற பேச்சு

தமிழக அரசின் சாதனைகளைப் பாராட்டுபவர் மீது பாய்வானேன்?

அமைச்சர் செ. மாதவன் கண்டனம்

மதுரை, நவ. 13—

"தி. மு. கழக ஆட்சியில் இலஞ்ச ஊழல் தாண்டவமாடுவதாகக் காங்கிரசார் கூச்சலிட்டனர்; 'ஆதாரத்துடன் அதனை மெய்ப்பியுங்கள்' என்ருேம் --- பேச்சு மூச்சைக் காணேம்!

"ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்களைக் கூறினுல், அதனை ஏற்று --- தவறுகளைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிருேம்; ஆனல், காங்கிரசாரின் பேச்சு 'ஆதார'மாக இல்லை --- 'ஆபாச'மாகவே இருக்கிறது"

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், மதுரை -- மேங்காட்டுப் பொட்டலில் நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டிக் கண்டித்தார். அவர் மேலும் விளக்கியதாவது:—

"தமிழக அரசை --- அண்ணவின் ஆட்சியை, மத்திய அமைச்சர்கள் பாராட்டுகின்றனர்; அரசின் சாதனைகளும், ஆட்சியின் திறனும் மத்திய அமைச்சர்களைப் பாராட்டச் செய்கிறது; இதைக் கண்டு காங்கிரசார் வயிற்றெரிச்சலடைகின்றனர்--- மத்திய அமைச்சர்களைத் தூற்றுகின்றனர்.

"தமிழகத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்துவிட்டோம்; சேலம் இரும்புத் தொழிற்சாலை அமைக்க ரூ. 10 கோடி செலவிட இருக்கிருேம்; காங்கிரசாருக்குத் துணிச்சல் இருந்தால், மத்திய அரசிடம் போராடி அதற்குப் பணம் பெற்றுத் தரட்டுமே!

"விவசாயிகளுக்காகக் காமராசர் பரிந்து பேசுகிருர்; முதலமைச்சராக அவர் இருந்தபோது, விவசாயிகளுக்குச் செய்த நன்மை என்ன?

"விவசாயிகள் கிணறுகள் தோண்டிக்கொள்ள --- பம்பு செட்டுகள் அமைத்துக்கொள்ள இந்த ஆண்டில் மட்டும் ரூ. 11 கோடி ஒதுக்கியிருக்கிருேம்; இரசாயன உரம் தாராளமாகக் கிடைப்பதற்கு வழி செய்திருக்கிருேம்; இவை யாவும் விவசாயிகளுக்குச் செய்த நன்மைகள் ஆகாதா?"

நாகர்கோவிலைப் பற்றி 'நைப்பாசை' கொள்ளாதீர்!

மாநகராட்சித் தேர்தலை நினைத்துத் தப்புக் கணக்குப் போடாதீர்!

சென்னை, நவ. 13—

"மாநகராட்சித் தேர்தலில் பெற்ற வாக்குகளை நினைத்துக் கொண்டு, 'நாகர்கோவிலிலும், பெருந்துறையிலும் வெற்றி பெறுவோம்' என்று காங்கிரசார் பேசிவருகிருர்கள்.

"மாநகராட்சித் தேர்தலில் மக்களின் நோக்கும், பார்வையும் வேறு; அது, சட்டமன்றத் தேர்தலைப் பிரதிபலிப்பதில்லை; மாநகராட்சித் தேர்தலில் காங்கிரசுக் கட்சியே மாநகராட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு ஓட்டுப் பெற்றிருந்தாலும், '1967 தேர்தலிலிருந்து மக்கள் பின்வாங்கவில்லை' என்று நான் துணிந்து சொல்லுவேன்.

"'இல்லை; மக்கள் எங்கள் பக்கமே வந்துவிட்டனர்' என்போர், நாகர்கோவிலில் பார்த்துக்கொள்ளட்டும்! இந்த ஏழைத் தொண்டனுக்கும் அங்கே ஓரளவு மதிப்புண்டு -- பிடிப்புண்டு! கன்னியாகுமரி மக்கள் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்பதற்காக ஆண்டுக்கணக்கில் அந்த மக்களோடு சேர்ந்து போராடியவன் நான்!

"பட்டம் தாணுப்பிள்ளை ஆட்சி நடந்த நேரத்தில் 11-தமிழர்கள் அங்கு சுட்டுக் கொல்லப்பட்டார்கள்; அந்த மக்களின் பிணத்தைக்கூடக் கொடுக்க மறுத்து பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினர்.

"அந்த நேரத்தில், அந்தத் தமிழர்களுக்காக ஒரு வார்த்தைக்கூட அனுதாபமாகச் சொல்லாதவர் காமராசர்! கேரளத்தாரோடு சேர்ந்துகொண்டு கிளர்ச்சியை எதிர்த்தார்! குமரி மக்கள் தாய்த் தமிழகத்தோடு சேர்ந்ததில் அவருக்கு உடன்பாடு கிடையாது -- அவர் அதை விரும்பவில்லை! அந்த போட்டியிடுவது அவருடைய சுயமரியாதைக்கு உகந்ததும் அல்ல!"

--ம. பொ. சிவஞானம்

(12-வது வட்டக் கூட்டத்தில்)

ஆட்சி முறையில் வரையறைகள்

கேரள முதலமைச்சர் கண்ணோட்டம்

மாலப்புரம், நவ. 12—

"தற்போதைய ஆட்சி முறையில் எத்தனையோ வரையறைகள் உள்ளன; அதனுல்தான் மாநிலங்களால் தமது அதிகாரத்தைச் செலுத்த இயலவில்லை!

"மத்திய அரசு, அரசியல் சட்டத்தின் பெயரால் மாநில அரசுகளுக்கு எத்தனையோ இடையூறுகள் விளைவிக்கிறது; அதனுல்தான் அந்த அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று பல கட்சிகளும் கோருகின்றன"

என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, மாநாடு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமண வயதை உயர்த்தும் மசோதா

புதுடில்லி, நவ. 11—

ஆண்கள்—பெண்கள் திருமண வயதை முறையே 21, 18 ஆக உயர்த்துவது சம்பந்தமாக மாநில அரசுகள் தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திருமண வயதை இதற்கு அதிகமாகவும் உயர்த்த வேண்டுமா என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆனால், இது சம்பந்தமான மசோதாவை, நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவருவது இயலக்கூடிய ஒன்றல்ல என்று சுகாதாரத்துறை அமைச்சர் மக்களவையில் கூறியிருக்கிருர்.

மும்மொழித் திட்ட முலவர்களின் 'சுருதி' குறைகிறது

'சட்டத்தைக் காட்டி இனி மிரட்ட முடியாது' என்பதை உணர்ந்தனர்

சிறுவர்களின் ஆவலைத்தூண்ட முயற்சி செய்யப்போகின்றனராம்

புதுடில்லி, நவ. 12—

"கல்வி பற்றிய தேசியக் கொள்கை தீர்மானத்தையும், மும்மொழித் திட்டத்தையும் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருக்கின்றது; ஆனுல், சிறுவர்களிடையே ஆவலைத் தூண்டுவதற்குப் பெருமுயற்சி மேற்கொள்ள வேண்டும்; அப்போதுதான் இரண்டாவது, மூன்ருவது மொழிகளைச் சாதுரியத்துடனும், விரைவாகவும் கற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராவார்கள்."

என்று, உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தையும், இந்தி மொழியையும், மற்ற இந்திய மொழிகளையும் இரண்டாவது மொழிகளாகக் கற்பிக்கும் முறை பற்றிய மூன்று நாள் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுண சென் கூறினர்.

புதுடில்லியில் துவங்கிய இந்த மாநாட்டில் இந்தியா முழுவதிலிருந்தும் சுமார் 30 கல்வி நிபுணர்களும், மொழிவல்லுநர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

மத்திய கல்வி அமைச்சர் மேலும் கூறியதாவது:—

'சிறுவர்களுக்குச் சரியான ஆவலைத் தூண்டிவிட்டால் தங்கள் தாய்மொழியைத் தவிர மற்ற மொழிகளையும் கற்றுக்கொள்வதற்கு அவர்கள் நிச்சயம் முன்வருவார்கள்.

"வெளிநாடுகளுக்கு மேற்படிப்புக்காகச் செல்லும் மாணவர்கள், ஒருசில மாதங்களில் அந்நிய மொழிகளைக் கற்றுக்கொள்ள முடியுமென்ருல், நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மற்றப் பகுதி மொழிகளை கற்றுக்கொள்ள முடியும் என்பதில் சந்தேகமேயில்லை."

நவீன விஞ்ஞான முறையில் டி வி எஸ் ரீடிரெடிங் செய்யும் டயர்கள் நீண்டகாலம் உழைக்கின்றன செலவும் குறைவு



புது டயர்களின் உற்பத்தி முறையையே டி.வி.எஸ். ரீடிரெட் செய்வதிலும் பின்பற்றுகிறது

ரீடிரெடிங் செய்த டயரில் ஆணி, கண்ணுடித்தூள் முதலியவை அணுவளவு இருந்தாலும் டயர் பழுதாகிவிடும், டி.வி.எஸ். ஒவ்வொரு டயரையும் கண்ணும் கருத்துமாய்ப் பரிசோதித்துச் சுத்தம் செய்கின்றனர்.

ஆணி, கண்ணுடித் துண்டு முதலியவற்ருல் காயம்பட்ட இடங்களை, விஞ்ஞான ரீதியில் பக்குவமாய் பழுதுபார்க்கின்றனர்.

ரீடிரெடிங் செய்த டயரின் ஒட்டுமானத்திற்குள் சிறிது காற்று இருந்தாலும், அதனுல் டயரே வெடித்துவிடலாம். எனவே காமெல்பாக் ரப்பரை அழுத்தமாகப் பொருத்திவிடுகின்றனர்.

ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காமெல்பாக் ரப்பரை உபயோகிப்பதில்லை. காமெல்பாக் ரப்பர் கெடாமல் இருக்க, குளிர்சாதன அறையில் வைத்திருக்கிருர்கள்.

இம்மாதிரியான விஞ்ஞான முறைகளால் டி.வி.எஸ். ரீடிரெடிங் செய்த டயர்கள் நீண்டகாலம் உழைக்கின்றன. உங்கள் டயர்கள் தாங்கும் அளவுக்கு மீண்டும் மீண்டும் ரீடிரெடிங் செய்யலாம்.

உங்கள் பழைய டயர்களை டி.வி.எஸ்.ஸில் ரீடிரெடிங் செய்யுங்கள். இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் ரீடிரெடிங் செய்வது டி.வி.எஸ்.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது—டி.வி.எஸ்.

TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

தொழிற்சாலைகள்:— பங்களூர் – கோயமுத்தூர் – மதராஸ் – புதுக்கோட்டை – செகந்திராபாத் – திருநெல்வேலி – விஜயவாடா

(இது ஒரு டி.வி.எஸ். ஸ்தாபனம்)

SJ-4672

தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் யார்?

தனது நெஞ்சைத் தொட்டுப் பார்க்கட்டும் டெல்லி அரசு!

மக்களவையில் இரா. செழியன் கண்டன முழக்கம்

புதுடில்லி, நவ. 12—

"ஊதிய உயர்வு கேட்ட மத்திய அரசு ஊழியர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; கைது செய்யப்பட வேண்டியவர்கள் அவர்கள் அல்லர்; விலைவாசி எற்றத்துக்கு யார் காரணமோ -- சரியான முறையில் திட்டங்கள் வகுக்கப்படாமல் போனதற்கு எவர் காரணமோ அவர்கள்தாம் கைது செய்யப்பட வேண்டியவர்களாவர்!

"மத்திய அரசு ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் திரும்பப் பெறப்பட வேண்டும்; தன்னுடைய உள் மனத்தை மத்திய அரசு தொட்டுப் பார்க்குமானல், உண்மையில் வழக்குத் தொடரப்பட வேண்டியவர்களும், கைது செய்யப்பட வேண்டியவர்களும் அரசு ஊழியர்கள் அல்லர் என்பது தெரியவரும்!"

இவ்வாறு மக்களவை தி.மு.க. உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்கள் சுட்டிக்காட்டி விளக்கினர்.

மக்களவையில், மத்திய அரசு மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகையில், ஊழியர்களைக் கைது செய்து மத்திய அரசு காவலில் வைத்திருப்பதைக் கண்டிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் விளக்கியதாவது:—

"அடிப்படை வாழ்க்கையின் இன்றியமையா ஊதியம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பது பற்றி அரசியல் சட்டத்தின் 43-வது பிரிவில் தெளிவாக இருக்கிறது.

'அரசியல் சட்டத்தின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட வேண்டும்' என்று இந்தியத் தொழில் மாநாட்டிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்டத்தைப் பின்பற்றியே செயல்பட வேண்டும் என்பதை மத்திய அரசு உணர்ந்திருக்குமானல், இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடுவது பற்றி அது தயக்கம் காட்ட வேண்டியதே இல்லை.

இதனைச் செயல்படுத்துவதில் பொருளாதார வகையில் ஏதேனும் தடங்கல் இருக்குமானல் நடுவர் முன்பு இது பற்றி எடுத்துக்கூறவும் அரசு முன்வரலாம்.

கடந்த சில ஆண்டுகளாகவே ஊழியர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஊதியத்தின் அளவு குறைந்துகொண்டே வருகிறது; அதே நேரத்தில் பெரிய வியாபார நிறுவனங்கள் பெரும் அளவில் வளர்ச்சியடைந்துகொண்டே போகின்றன! இதே போன்ற ஏறுக்கு மாருன நிலைமையும், நாட்டில் பெரிய வேறுபாட்டினை ஏற்படுத்திவிட்டிருக்கிறது!

அரசு ஊழியர்களின் மனக்குறையை நீக்குவதற்கான வழிவகைகளுக்குத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்; இதைச் செய்யவில்லையானல் தொடர்ந்து இடர்ப்பாடுகள் நீடித்துக்கொண்டேதான் இருக்கும்."

ரூபாய் மதிப்பு (வாங்கும் சக்தி) குறைந்துகொண்டே வந்திருப்பதற்கான புள்ளிவிவரங்களையெல்லாம் தந்து பேசிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தொழிலாளியின் உண்மையான சம்பளம் 1947 முதலே கணிசமான அளவுக்குக் குறைந்துகொண்டு வந்திருக்கிறது.

நாளுக்கு நாள் பொருளாதார ஏற்றத்தாழ்வு வளர்ந்துகொண்டே போகிறது; இந்த நிலைமை தடுத்துநிறுத்தப்படாவிட்டால் நாடே விரைந்து துன்பத்துக்கு உள்ளாகும்.

தேவை அடிப்படையிலான குறைந்தபட்சஊதியம் கிடைக்கும் வகையில் நடுவர் தீர்ப்பு ஆவன செய்ய வேண்டும்.

'சேனை'கள் பதினைந்து!

கணக்குத் தருகிறது டில்லி!

புதுடில்லி, நவ. 12—

"தற்போது இந்தியாவில் மொத்தம் 15 அதிகாரபூர்வமற்ற 'குறுகிய வட்டார உணர்ச்சி படைத்த சேனைகள் இயங்கி வருகின்றன"

என்று மக்களவையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஏழு பல்வேறு மாநிலங்களில் இயங்கிவரும் இந்தச் சேனைகள் வருமாறு:—

மகாராட்டிரம்:—சிவ சேனை, இந்துஸ்தானி லால் சேனை, இந்து சேனை, மதங் சேனை, பீம சேனை.

கருநாடகம்:— அகண்ட பாரத் தர்ம ரட்சண கிராந்தி சேனை, நிருத்யோகி சேனை, கன்னட குது கலிகரா வீர ராஜன்னு சேனை.

மேற்கு வங்கம்:— கிராந்தி சேனை, பிஜய் சேனை.

ஆந்திரம்:— அலி சேனை, இந்து ராஷ்டிர சேனை

அசாம்:—லட்சித் சேனை.

குசராத்:—சர்தார் சேனை.

மத்தியப் பிரதேசம்:—சத்தீஷ்கார் சஜ்ராங்.

இவற்றில் சிவசேனைதான் மிகப் பெரியதாம்; அதில் 65 416 உறுப்பினர்கள் உள்ளனராம்

'அலி சேனை'யில் உள்ள 10 பேருக்கு கடந்த மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் ஐதராபாத் நகரத்தில், 'தடிக் கம்புகளை எப்படிப் பயன்படுத்துவது' என்பது பற்றிப் பயிற்சியளிக்கப்பட்டதாம்; அதன் பிறகு அவர்களின் நடவடிக்கை எதுவும் கவனத்துக்கு வரவில்லையாம்.

மராட்டியத்தில் 'ப்லிம் சேனை' என்னும் மற்றொரு சேனையும் உண்டாம்; ஆனல் அது இப்போது இயங்கவில்லையாம்.

சர்தார் சேனை, கிராந்தி சேனை, விஜய் சேனை ஆகியவற்றின் நடவடிக்கைகள் எதுவும் கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லை.

பீமசேனை நான்கு பேரடங்கிய நடவடிக்கைக் குழு ஒன்றை அமைத்ததோடு இருக்கிறது.

லட்சித் சேனை என்பது, அமைப்பு ரீதியாக இன்னும் உருவெடுக்கவில்லையாம்!

புதுக்கோட்டை நூலகத்துக்குப் பரிசு

திருச்சி மாவட்டத்தில் அதிகமான நூலக உறுப்பினர்களைக் கொண்ட சிறந்த கிளை நூலகமாக புதுக்கோட்டை நூலகம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குரிய பரிசுக் கோப்பை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவரால் அளிக்கப்பட்டதை, மாநில நூலகத் துறை இயக்குநர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் புதுக்கோட்டை நூலகர் திரு. எஸ். இராமலிங்கத்திற்கு 9—11—68-ல் திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்ற விழாவில் அளித்தார். இது புதுக்கோட்டை நகரத்திற்கு கிடைத்த பெருமை ஆகும்.

காந்தி வழிவந்தவர்கள் கடைபிடிக்கும் எளிமை!

ஆடம்பர வெளிநாட்டுக் கார்களைக் கைவிட மனமில்லை!

மத்திய அமைச்சர்களின் போக்கு --- மக்களவையில் தகவல்

புதுடில்லி, நவ. 12—

மத்திய அமைச்சரவையில் உள்ள மொரார்ஜி தேசாய், டாக்டர் திரிகுண சென் தவிர மற்ற எல்லா அமைச்சர்களுமே இறக்குமதி செய்யப்பட்ட பெரிய அரசாங்கக் கார்களை வைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

மொரார்ஜி தேசாய், அரசாங்க காரைப் பயன்படுத்துவதில்லை.

டாக்டர் திரிகுண சென், இந்தியாவில் செய்யப்பட்ட காரைப் பயன்படுத்துகிருர்.

இணை (இராசாங்க) அமைச்சர்கள் 17 பேரில் 9 பேர் வெளிநாட்டுக் கார்களைப் பயன்படுத்துகின்றனர்.

துணை அமைச்சர்கள் 20 பேரில் 12 பேர் உள்நாட்டுக் கார்களைப் பயன்படுத்துகின்றனர்.

மற்றவர்களில் சுரேந்திர பால் சிங் மட்டும் பெரிய வெளிநாட்டுக் காரைப் பயன்படுத்துகிருர்.

மற்றும் ஆறு பேர் சிறிய வெளிநாட்டுக் கார்களையோ, 1960-க்கு முந்திய வெளிநாட்டுக் கார்களையோ அல்லது இந்தியாவில் பொருத்தப்பட்ட கார்களையோ பயன்படுத்துகின்றனர்.

பாதுகாப்புத் துறைத் துணையமைச்சரான திரு. எம். ஆர். கிருஷ்ணு என்பவர், இராணுவத்தைச் சேர்ந்த கார் எது கிடைக்கிறதோ அதை அவ்வப்போது பயன்படுத்துகிருர்.

மக்களவையில் ஓ. பி. தியாகி என்பவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்ட தகவல் தரப்பட்டது.

"கூடுமானவரையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கார்களைப் பயன்படுத்துமாறு தலைமை அமைச்சர், தமது சக அமைச்சர்களுக்கு அறிவுறுத்துவாரா?"

என்று திரு. ஓ. பி. தியாகி கேட்டார்.

அதற்கு அளிக்கப்பட்ட பதில்:—

"வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய கார் (1960-ம் ஆண்டு மாடல்) ஒன்று மட்டுமே அமைச்சர் பயன்படுத்துவதற்காக வைத்துக்கொள்ளுமாறு ஒவ்வோர் அமைச்சகத்துக்கும், இலாகாவுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள கார்களை அரசு வர்த்தகக் கார்ப்பரேஷனிடம் ஒப்படைத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக, இந்தியக் கார்களை வைத்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பாராட்டுரை

புதிய மேயரையும், துணை மேயரையும் பாராட்டிக் கட்சித் தலைவர்களும், பல்வேறு உறுப்பினர்களும் ஆணையரும் பேசினர்.

இருவரும் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

பாராட்டிப் பேசியோர்:—வி. முனுசாமி, குப்புசாமி (காங்), டாக்டர் சலிபதுல்லா (லீக்), சி. ஆர். நரசிம்மன் (சுதந்), பட்சி இராசகோபாலன் (தமிழரசு), எஸ். ஜி. விநயகமூர்த்தி (காங்), சா. கணேசன், மைனர் மோசஸ், சிலார் மியான் (லீக்), கே. ஏ. சாரங்கபாணி (காங்), இராம ராவ் குப்தா (காங்), கே. எம். சுப்பிரமணியம் (காங்), பசுபதி தனராஜ் (காங்), ஜம்புலிங்கம் (காங்), தேவநாதன் (சுதந்), எம். எஸ். இராமச்சந்திரன், எஸ். வி. வேலு, கே முருகேசன், பவளவண்ணன், வை. பாலசுந்தரம், ஏ. கி புகழேந்தி, என். வி. என். சோமு.

உழைப்பாளர் கட்சி உறுப்பினர் இராசரத்தின நாயக்கர் மேயருக்கும், துணை மேயருக்கும் மாலையணிவித்துப் பாராட்டினர்.

தியாகராயர் சிலைக்கு மாலை

மேயர் தேர்தலுக்காக ரிப்பன் மாளிகைக்குள் நுழைகையில், கழக உறுப்பினர்கள் அனைவரும் சர் தியாகராயர் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்திவிட்டு உள்ளே சென்றனர்.

அண்ணாவுக்கு மாலையணிவித்தனர்

வெற்றிபெற்ற மேயர், துணை மேயர் ஆகியோர் தேர்தல் முடிந்ததும், அறிஞர் அண்ணா-- கழக முன்னணியினர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுக்கு மாலையணிவித்து நன்றிதெரிவித்துக் கொண்டனர்.

'கூடலரசன்'

புதிய வார இதழ்

மதுரை, நவ. 12—

'கூடலரசன்' என்னும் கொள்கை பரப்பும் வார இதழின் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், மதுரை மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி முன் தோழர் கூடலரசன் தம்மைப் பதிவு செய்துகொண்டார்.

இவ்விதழ், மதுரையிலிருந்து வருகிற சனவரி முதல் வெளிவரும்.

முகவரி:—62, நாயக்கர் புதுத் தெரு, மதுரை-1.

குமரி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு

குமரி மாவட்டத்தின் பல்வேறு கிளைகளின் உறுப்பினர்களான தோழர்கள் (1) பி. எம். கண்ணு, (2) ஏ. இராமசாமி, (3) பி. நீலகண்டன், (4) மடத்துவாசல் பி. நீலகண்டன், (5) என். கோபாலகிருஷ்ணன், (6 சி. இர்வின் சிங், (7) பி. இராமச்சந்திரன், (8) எஸ். கணேசன், (9) கே. முத்துராசு, (10) சி. மகராசன், (11) எஸ். சோமு, (12) பி. அணஞ்சபெருமாள், (13) கே. சுடலையாண்டி, (14) எஸ். மணி, (15) எஸ். சேது, (16) சி. நமசிவாயம், (17) எஸ். ஆறுமுகம் ஆகியோர்மீது குமரி மாவட்ட தி. மு. கழகச் செயலாளரால் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை குறித்துத் தக்க விசாரணை செய்து நீதி வழங்குமாறு சம்பந்தப்பட்ட தோழர்கள் தலைமைக் கழகத்திற்கு முறையிட்டுக்கொண்டுள்ளதால், அதன்பேரில், முறைப்படி விசாரணை செய்து தலைமைக் கழகம் முடிவு அறிவிக்கும்வரை மேற்குறிப்பிட்டுள்ள தோழர்கள்மீது குமரி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எடுத்துள்ளதாக அறிவிக்கப்படும் நடவடிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவது நிறுத்திவைக்கப்படுகிறது.

'அறிவகம்', சென்னை-13
13—11—68

என். வி நடராசன்,
அமைப்புச் செயலாளர், தி.மு.க.